இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

யோவான் ஒட்டக முடி ஆடையை அணிந்திருந்தார்; தோல் கச்சையை இடையில் கட்டியிருந்தார்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் உண்டு வந்தார். அவர் தொடர்ந்து, "என்னைவிட வலிமைமிக்க ஒருவர் எனக்குப்பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதி இல்லை. நான் உங்களுக்குத் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தேன்; அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார்" எனப் பறைசாற்றினார். (மாற்கு1:6-8)



# உண்மையான நீதி, மக்களை மகிழ்விக்கும்

## -திருத்தந்தை அறிவுறுத்து

**வத்திக்கான்** : எல்லா தீர்ப்புகளும், நீதியானதாக இருக்காது, அதேநேரம், சமத்துவமற்ற நிலை, உரிமைகள் இழப்பு, வன்முறை, மாண்பற்ற நிலை ஆகியவற்றைக் கொணரும் எந்த ஒரு சட்டமும், சரியானதாக இருக்காது என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்

நீதி, உண்மையில் நேர்மையானதாக இருக்கும்போது, அது மக்களை மகிழ்விக்கும் என்ற நினைவுறுத்தலோடு நீதிபதிகள் நடத்திய மெய்நிகர் கூட்டம் ஒன்றிற்கு, காணொளிச் செய்தியொன்றை திருத்தந்தை அனுப்பியுள்ளார்.

ஆப்ரிக்கா மற்றும், அமெரிக்காவின் சமுதாய உரிமைகள் பற்றிய கழகத்தின் நீதிபதிகள் நடத்திய இணையவழி கூட்டத்திற்கு காணொளிச் செய்தி அனுப்பியுள்ள திருத்தந்தை, ஆப்ரிக்கா, மற்றும், அமெரிக்காவைச் சேர்ந்த இருபால் நீதிபதிகளே, புதியதொரு சமுதாய நீதியைக் கட்டியெழுப்புவதற்கு, நீங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டு கிறேன் என்று கூறியுள்ளார்.

எதார்த்தம், நீதியின் தலைமுறை, அர்ப்பணம், வரலாறு, மக்கள், ஒருமைப்பாடு ஆகிய ஆறு கூறுகள் மீது, சமுதாய உரிமைகள் கட்டியெழுப்பப்படவேண்டும் என்று, தமது செய்தியில் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, நீதி, மனித மாண்பு மற்றும், சமத்துவம் ஆகியவற்றை ஊக்குவிக்குமாறு, நீதிபதிகளைக் கேட்டுக்கொண்டார்.

அதிகாரத்தில் இருப்பவர்கள், சரியானதைத் தீர்மானிக்கும் திறனற்றிருப்பதை, சந்தேகங்களோடும் நம்பிக்கையின்மை யோடும் நோக்கும் மக்களுக்கு, நல்வாழ்வு வழங்கும் நோக்கத்தில், தங்களின் அன்றாடப் பணிகளிலிருந்து நேரம் ஒதுக்கி, இந்தக் கூட்டத்தில் பங்குகொண்ட, நீதிபதிகளின் நல்ல முயற்சிகளை ஊக்குவிப்பதாகவும் திருத்தந்தை கூறினார். நீதி, உண்மையில் நேர்மையானதாகவே இருக்கும்போது, அது மக்களை மகிழ்விப்பதோடு அவர்களை மதிப்புள்ள வர்களாக்கும் என்பதை நினைவில் இருத்துமாறு கூறிய, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எல்லாத் தீர்ப்புகளும், நீதியானதாக இருக்காது, அதேநேரம், சமத்துவமற்ற நிலையையும், உரிமைகள் இழக்கப்படுவதையும், வன்முறையையும், மாண்பற்ற நிலையையும் கொணரும், எந்த ஒரு சட்டமும், சரியானதாக இருக்காது என்றும் கூறினார்.

“சமுதாய நீதியைக் கட்டியெழுப்புதல்: நலிந்த நிலையிலுள்ள மக்களின் அடிப்படை உரிமைகளை முழுமையாய் செயல்படுத் துவது நோக்கி..” என்ற தலைப்பில்,



இக்கூட்டம், நடைபெற்றது.

அர்ஜென்டீனா, பொலிவியா, பிரேசில், கனடா, சிலே, கொலம்பியா, கோஸ்ட்டா ரிக்கா, கியூபா, ஈக்குவதோர், அமெரிக்க ஐக்கிய நாடு, குவாத்தமாலா, கொண்டூராஸ், ஜமெய்க்கா, மெக்சிகோ, பெரு, உருகுவாய், வெனெசுவேலா, மொராக்கோ ஆகிய நாடுகளைச் சார்ந்த நீதிபதிகள் இந்த கூட்டத்தில் பங்குபெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்

# 'திருஇருதய ஆண்டவர்' மறைக்கல்வி பணிக்குழுவினர் மாணவர் படைப்பை அரங்கேற்றினர்

**கோலாலம்பூர்**: தற்கால சூழலின் அடிப்படையில், புதிய இயல்புக்கு ஏற்றாற்போல், இங்கு பீல் சாலையில் உள்ள திருஇருதய ஆண்டவர் பங்கின் மறைக்கல்வி பணிக்குழுவினர், தங்களது வருடாந்திர மாணவர் படைப்பு நிகழ்ச்சியை முன்பதிவு செய்யப்பட்ட காணொளி வழி மேற்கொண்டனர்.

பங்கின் ஒருங்கிணைந்த மறைக்கல்வி மாணவர்களின் திறமைகளைக் கொண்டு இயங்கலை வாயிலாக மேற்கொண்ட இந்த மாணவர் படைப்பு விழா பங்கு youtube channel- வாயிலாக கடந்த நவம்பர் 28 சனிக்கிழமை, இரவு 8.00 மணிக்கு பதிவேற்றம் கண்டது.

இந்நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர், இந்த மாணவர் படைப்பு நிகழ்ச்சியைப் பங்குத் தந்தை அருள்தந்தை எட்வின் பீட்டர் அவர்களின் ஆதரவோடும் மறைக்கல்வி ஆசிரியர்களின் ஒத்துழைப்போடும் முதன் முறையாக காணொளி வழி அரங் கேற்றினர். இது பலருக்கு ஒரு புதிய மற்றும் சவாலான அனுபவமாக இருந்தது என ஏற்பாட்டுக்குழுவினர் அவர்களது அனுபவத்தைப் பகிர்ந்தனர். தொடக்கத் திலிருந்து இறுதி வரை. மறைக்கல்வி பணிக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் மரியா வேதனாயகம் அவர்களும் ஏற்பாட்டுக் குழுவினரும் இந்நிகழ்ச்சியை வெற்றி கரமாக நடத்திட பல்வேறு வகையிலும் கோணங்களிலும் கவனித்துத் திட்டமிட வேண்டியிருந்ததாகத் தெரிவித்தனர்.



இளவரசி கிறிஸ்டபெல்

மேற்கண்ட மேடை நிகழ்ச்சிக்கு அறிவிப் பாளராக பொறுப்கேற்றிருந்த 10 வயது இளவரசி கிறிஸ்டபெல், தைரியமாகவும் மகிழ்ச்சியாகவும் நிகழ்ச்சியை வழிநடத் தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் உண்மையிலேயே பாராட்டுக் குரியவர்கள் என போற்றப்பட்டனர்.



## புனித இரண்டாம் ஜான் பவுல் அவர்களுடனான தமது நினைவலைகளைப் பகிர்கிறார் கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ்

(தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட தொடர் கட்டுரை)

**கடந்த வாரத் தொடர்ச்சி (இறுதிப் பகுதி)**

**திருத்தந்தை ஜோன் பவுல் அவர்களின் பகிர்வு**

2005, மார்ச் 22 -ஆம் திகதி, செவ்வாய்க் கிழமை நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். நான் படுக்கையி லேயே இருக்க வேண்டிய நிலையில்,



புனித 2-ஆம் ஜோன் பவுல்



கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ்

பெரும்பாலான நேரங்களில் ஒரு பக்கமாகவே படுக்க வேண்டியிருந்தது. அதுவும் எனக்கு ஓர் ஆசீராகவே இருந்தது.

தொடர்ந்து ஏப்ரல் 5, பாஸ்கா இரண்டாம் வாரத்தின் செவ்வாய்க்கிழமை வரை, அதாவது மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் வரை, திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுலுடன் அவரின் துன்பங்களில் இணைந்தவராக இருந்ததோடு, அவரது என்றும் மறவா அழைப்பான 'எழுந்திருங்கள் போவோம்' (மாற்கு14:42) என்பதின் பொருளை ஆழ உணர்ந்தேன்.

இயேசு நேரம் வந்துவிட்ட போது' கெத்சமணி தோட்டத்தில் அவரோடு நெருங்கியிருந்த சீடர்களான பேதுரு, யாக்கோப்பு, யோவான் ஆகியோரிடம் "எழுந்திருங்கள் போவோம் (மாற்கு 14:42) என்றார். இதில் இயேசு மட்டும் எழுந்து தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற செல்லவில்லை, மாறாக, சீடர்களும் அவருடன் செல்ல வேண்டும் என்பதாகும்.

"எழுந்திருங்கள் போவோம்" எனும் அழைப்பு, குறிப்பாக அவரால் அழைக்கப்பட்ட அவரது நண்பர்களான அனைத்து ஆயர்களுக்கும் உரித்தானது. இந்த அழைப்பானது, சோதனைக்கு உரியதாகவும், பெரும் முயற்சியும், துன்பம் தம் தரும் சிலுவையாகவும் இருந்தாலும், நாம் இந்த அழைப்பைப் பயத்தின் காரணமாக உதறித்தள்ளி விடக்கூடாது. இவை நம்பிக்கையின் கனிகளான அமைதி மற்றும் மகிழ்ச்சிக்குரிய வார்த்தைகளாகும்.

'மற்றொரு சமயத்தில், அதே மூன்று சீடர்களிடம் இயேசு "எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்" (மத் 17:7) என்பதை அவர் நினைவூட்டினார். இறைவனின் அன்பானது நம்மால் சுமக்க இயலாத அளவுக்கு சுமையைச் சுமத்துவதில்லை. அல்லது நிறைவேற்ற இயலாத அளவுக்கு வற்புறுத்துவதில்லை. நம்மிடமிருந்து எதைக் கேட்டாலும் அதற்கான உதவியை அவர் நல்குகின்றார்.

ஆண்டவரும் போதகருமானவரின் வார்த் தைகளை எதிரொலிக்கும் வகையில், நானும் உங்கள் ஒவ்வொருவருக்கும் கூறுகிறேன், "ஆயர்களாக இருக்கும் அன்பு சகோதரர்களே "எழுந்திருங்கள் போவோம். கிறிஸ்துவில் கொண்ட முழு நம்பிக் கையில் முன்னோக்கிச் செல்வோம். அவர் மட்டுமே அறிந்திருக்கும் வழியின் இலக்கை நோக்கிப் பயணிக்கும் நமக்கு அவர் துணையிருப்பார்" என்றார் திருத்தந்தை ஜோன் பவுல்.

**கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ்**

நான் எனது படுக்கைக்கு முன்னால் இருந்த ஒரு தொலைக் காட்சிப் பெட்டி, BBC நிகழ்ச்சியை ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. அதன் வழி நானும் திருத்தந்தையுடன் மிக 'அருகில்' இருந்த வண்ணம் ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைய முடிந்தது.

நானும் ஓர் ஆயர் என்ற வகையில் அவரது வழி பயணத்தில் இணைந்து பயணிக்க எனக்கும் வாய்ப்புக்கிட்டியது. கலிபோர் னியாவுக்கு விடுமுறையில் சென்றிருந்த போது, எழுந்திருங்கள் போவோம்" எனும் இரண்டாம் ஜான் பவுல் சமீபத்தில் எழுதிய இரண்டாவது நூலை வாங்கினேன்.

இந்நூலின் முடிவுரையில், நான் மட்டுமல்ல அனைத்து ஆயர்களும் திருத்தந்தையுடன், அவர்களது தூதுப்பணியும் வாழ்வும் முழுமையுற எருசலேமுக்கான இயேசுவின் இறுதிப் பயணத்தில் இணைய அழைப்பாகவும் சிலுவையில் நிறைவெய்தும் வாழ்வாகவும் அமைகிறது என்பதை அறிவுறுத்தியுள்ளார் (புனித) திருத்தந்தை 2-2-ஆம் ஜோன் பவுல்.

*முற்றும்* *ஆர்.கே.*

## கன்னி மரியா, 'அமல உற்பவி' பொருளறிந்து கொண்டாடுவோம்

இறைவனின் தாயாக திகழும் கன்னி மரியா தமது தாயின் வயிற்றிலேயே அமல உற்பவியாக தோன்றியதைக் கொண்டாடும் திருநாள் ஆண்டுதோறும் டிசம்பர் 8-ஆந் நாள் சிறப்பிக்கப்படுகிறது. தொடக்கப் பாவத்தின் கறைகள் அனைத்தில் இருந்தும் இறையன்னை மரியா பாதுகாக்கப்பட்டதை இந்த பெருவிழாவில் கொண்டாடி மகிழ்கிறோம்.

**பின்னணி**

கடவுளின் பிரதிநிதியாக நாசரேத்துக்கு சென்ற வானதூதர், "அருள்மிகப் பெற்றவரே வாழ்க!" (லூக்கா 1:28) என்று கன்னி மரியாவை வாழ்த்துகிறார். தூய ஆவியால் நிரப்பப்பட்ட எலிசபெத்து, "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்" (லூக்கா 1:42) என போற்றுகிறார். மீட்பராம் இறைமகனை தம் கருவில் தாங்குமாறு, மரியா பாவமின்றி பிறந்தார் என்பதையே மேற்கண்ட வார்த்தைகள் உறுதி செய்கின்றன.

ஆகவேதான், ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" என மரியா பாடினார் என்பதில் சந்தேகமில்லை.

**வரலாறு**

முதன்முதலாக, புனித அன்னாவின் வயிற்றில் கன்னி மரியா கருவாக உற்பவித்ததைக் கொண்டாடும் விழா கி.பி.7-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. 8-ஆம் நூற்றாண்டில், 'மரியாவின் பிறப்பு கொண்டாடப்பட்ட சான்றுகளை அக்காலத் திருப்பலி நூல்களில் காணப்படுகிறது. 11-ஆம் நூற்றாண்டில், "கன்னி மரியா தொடக்கப் (சென்ம) பாவமின்றி உற்பவித்தார்" என்று கூறும் 'அமல உற்பவ நம்பிக்கை' உருவானது.

1050-ல் கூடிய வெர்செல்லி சங்கத்தில், மரியாவின் அமல உற்பவத்துக்கான விழாவை திருத்தந்தை 9-ஆம் லியோ பரிந்துரை செய்தார். பைசாந்திய பேரரசு முழுவதும் மரியாவின் அமல உற்பவ விழாவைக் கொண்டாடுமாறு, பேரரசர் முதலாம் மனுவேல் 1166-ஆம் ஆண்டு ஆணையிட்டார். 1439-ல் கூடிய பாசல்-புளோரன்ஸ் பொதுச்சங்கத்தின் அமர்வு, மரியாவின் அமல உற்பவத்தை உறுதி செய்தது. 1476-ல் மரியாவின் உற்பவ விழாவுக்கு அனுமதி வழங்கிய திருத்தந்தை 4-ஆம் சிக்ஸ்துஸ், 1477 பிப்ரவரி 28-ஆம் தேதி அதற்கான பலன்களை அறிவித்தார். திரிதெந்து பொதுச்சங்கத்தை அடுத்து,



உருவான நாள்காட்டியிலும் இந்த விழா இடம் பெற்றது. 1568-ல், மரியாவின் உற்பவ விழாவுக்கான திருப்பலி மற்றும் திருப்புகழ்மாலை செபத்துக்கு திருத்தந்தை புனித 5-ஆம் பையஸ் அவர்கள் அனுமதி வழங்கினார்.

17-ஆம் நூற்றாண்டில், மரியாவின் பிறப்பு விழா திருஅவை முழுவதும் கொண் டாடப்பட்டது. 1708-ல் திருத்தந்தை 11-ஆம் கிளமென்ட், மரியாவின் உற்பவ விழாவை கடன் திருநாளாக அறிவித்தார். திருத்தந்தை 14-ஆம் கிரகோரி (1831-1846) காலத்தில், மரியாவின் அமல உற்பவத்தை திருஅவையின் நம்பிக்கை கோட்பாடாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

1854, டிசம்பர் 8-ஆம் திகதி, 'மரியாவின் அமல உற்பவம்' குறித்த நம்பிக்கையை திருத்தந்தை 9-ஆம் பையஸ் திருஅவையின் விசுவாசக் கோட்பாடாக அறிவித்தார். இதையடுத்து, 'மரியாவின் அமல உற்பவம்' என்ற பெயரை இந்த விழா பெற்றது. 1969-ல் சீரமைக்கப்பட்ட நாள்காட்டி முதல், இந்த திருநாள் பெருவிழாக்களின் பட்டியலில் இடம் பெற்று வருகிறது.

**சிந்தனைக்கு:**



**ஆதிக்கம் செலுத்தி வந்த உரோமையப் பேரரசின் விளிம்பில் இருந்த ஒரு கிராமத்தில், வலுவற்ற ஒரு சூழலில் பிறந்த சிறு குழந்தையின் வழியே, மீட்பு இவ்வுலகிற்கு வந்தது என்ற உண்மை, நமக்கு நம்பிக்கையைக் கொணரவேண்டும்.**

## மனமாற்றத்துக்கான உருமாற்றம் பெறுவோம்

ஜோர்தான் ஆற்றில் திருமுழுக்குக் கொடுத்த 'திருமுழுக்கு யோவான்' திருவருகை காலத்தில் நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக கொடுக்கப்படுகிறார். ஜோர்தான் ஆற்றைக் கடந்த இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கண்டது போல்(யோசுவா3:5), ஜோர்தான் ஆற்றில் திருமுழுக்குக் கொடுத்த யோவான், 'மீட்பரை' காணும் பாதையைக் காட்டினார். ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள், அவருக்காகப் பாதை யைச் செம்மையாக்குங்கள்" (மாற்கு1:3) என உரக்க உரைத்தார்.

பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர் எலியாவைப் போல் (2"ரசர் 1:8) உடை யணியும் திருமுழுக்கு யோவான் முதலில் வர வேண்டும் என்பது இறைத் திருவுளம் (மாற்கு9:9-13). மீட்பர் வருகையைக் காட்டும் திசைமானியாக விளங்கும் திருமுழுக்கு யோவான் நமக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு.

'அவரது செல்வாக்குப் பெருக வேண்டும்; எனது செல்வாக்குக் குறைய வேண்டும்' (யோவான்3:30) என சாட்சியம் அளித்தவர் திருமுழுக்கு யோவான். அவர் (இயேசு) வளர வேண்டும்; நான் குறைய வேண்டும். நமது வாழ்வில் இயேசு வளர வேண்டும் என்பதை நமது முதன்மை குறிக்கோளாக கொண்டிருக்கிறோம். இதன் பொருள் என்ன? இயேசு நமது சிந்தனையையும் மனதையும் ஆட்கொள்ள வேண்டும். அவர் நம்மில் வாழ வேண்டும். அச்சத்தைத் தவிர்ப்போம், தர்மத்தையும் அறத்தையும் வளர்ப்போம். இவை வாழ்வியல் பண்பாக மாற வேண்டும்.

இரண்டாவது, நாம் குறைய வேண்டு மென்றால் நமது எண்ணம், ஆசை, குறிகோள், எதிர்பார்ப்பு ஆகியவை இயேசுவில் கறைய வேண்டும். நம்மில் இருக்கும் சுயநலம் வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டும். தாழ்ச்சிக் கொள்ள வேண்டும். 'கடவுளுடைய வல்லமை மிக்க கரத்தின் கீழ் உங்களைத் தாழ்த்துங்கள். அப்பொழுது அவர் ஏற்றக் காலத்தில் உங்களை உயர்த்துவார்' (1பேதுரு5:6). இதனால், நம் வழியாக, நம்மில் இயேசு வாழ்கிறார்.

இன்றைய முதல் வாசகம் (எசா.40:1-11), திருமுழுக்கு யோவானைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. கடவுள் தம் மக்களைப் பார்க்க பூமிக்கு வரும் விருப்பத்தை இந்த வாசகம் வெளிப்படுத்து கிறது. 'மக்களைத் தயாராக இருக்கச் சொல்லுங்கள், அவர்கள் தயாரானதும் நான் வருவேன்' என கடவுள் சொல்லவில்லை. அவர் கட்டளையிடுகிறார், ஆயத்தப்படுத் துங்கள், நாம் வருகிறோம்'. அதற்கு ஆயத்தமாக இருப்பதும் இல்லாமல் இருப்பதும் நம்மைப் பொறுத்தது. ஆண்டவருடைய நாள் திருடனைப் போல் வரும்' என இரண்டாம் வாசகம் (2பேதுரு5:10) எச்சரிக்கிறது. ஆனால் 'அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு அவரது மீட்பு அண்மையில் உள்ளது என்பது உறுதி' என இன்றைய திருப்பாடலும் (85:9) நினைவுறுத்துகிறது.

எனவே, ஆண்டவரது வருகையை எதிர்நோக்கும் மக்களாக மட்டும் இருந்து விடாமல், திருமுழுக்கு யோவானைப் போல் மற்றவர்களுக்கு வழிகாட்டும் திசைமானி யாக இருப்போம்.

*அந்தோணி இன்னாசி ஸ்ரீ கெம்பாவான்*

**திருவருகைக்காலம் 2-ஆம் ஞாயிறு**

எசா 40: 1-5, 9-1
திபா 85: 8ab-9. 10-11. 12-13 . .
2 பேதுரு 3: 8-14
மாற்கு 1: 1-8

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் 2**